**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, KRISHNAGIRI**

**O.S. No. 46/2024**

**PW.2** is solemnly affirmed on **01.08.2025** in accordance with the provisions of the 1969.

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. மு. கார்மேக கண்ணன் | Father Name | |
| Village | | Taluk | |
| Religion | | Calling | |
| | | Age | |

முதல் விசாரணை :

நான் தற்போது உதவிப்பொறியாளராக ஊத்தங்கரையில் பணிபுரிந்து வருகிறேன். மின் இணைப்பு எண். 134017525 என்ற இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் திரு. ராஜராமன் என்பவர் பெயரில் உள்ளது. அந்த மின் இணைப்பு 93/2B என்ற சர்வே எண்ணிற்கு எப்போது மாற்றப்பட்டது என்றால் 23.02.2021 மாற்றப்பட்டது. ராஜாராமன் என்பவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்கண்ட மின் இணைப்பு சர்வே எண். 93/2B–ல் அமைந்துள்ள கிணற்றிற்கு மாற்றப்பட்டதற்கான Proposal and Estimate ஆவணங்கள் தற்போது கொண்டு வந்துள்ளீர்களா என்றால் கொண்டுவந்துள்ளேன். அந்த ஆவணம் Ex.X1 ஆக குறியிடப்படுகிறது.

குறுக்கு விசாரணை :–

நான் தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் ஆவணத்தில் ராஜராமன் என்பவர் மின் இணைப்பினை மாற்றி அமைப்பதற்காக விண்ணப்பம் கொடுத்தார் என்பதற்கான ஆதாரம் Ex.X1–ல் காணப்படவில்லை என்று சொன்னால் சரிதான். கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் மின் இணைப்பு எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் 28.07.2011–ல் கொடுக்கப்பட்டது. இந்த மின் இணைப்பினை மாற்றிக்கொடுக்க வேண்டுமென்றால் சம்மந்தப்பட்ட உரிமையாளர்களின் சம்மத ஆவணம் அல்லது NOC (ஆட்சேபனை இல்லை என்ற சான்று) பெறப்பட்டிருக்க வேண்டும் என்று சொன்னால் இதற்கு NOC தேவையில்லை. ராஜாராமன் மின் இணைப்பினை மாற்ற வேண்டி கொடுத்த மனுவிற்கு தனக்கு ஆட்சேபனை இல்லை என்று ஜெயபால் ராஜாராமனுக்கு

கொடுத்த சம்மத கடிதம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை என்று சொன்னால் ராஜாராமன் பெயரில் மட்டுமே ஆவணம் இருப்பதால், ஜெயபாலிடம் இருந்து எந்த ஆவணமும் பெற வேண்டிய அவசியம் எழவில்லை. வாதி கேட்டுக்கொண்டதின் அடிப்படையில் தான் மின் இணைப்பினை மாற்றக்கோரி கொடுக்கப்பட்ட கடிதத்தினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் நான் ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே சாட்சியம் அளிக்கின்றேன்.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R Digitally signed by LATHA V R

Principal District Judge,
Krishnagiri.